## RECORD OF DEPOSITION OF WITNESS

### IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
### KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 2/2021 | **CNR No.** | : | TNKI13-000111-2020 |
| **Name** | : | அழகிரி | **Father's Name** | : | பண்ணீர் செல்வம் |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW3 |
| **Age** | : | 37 | **Village** | : | கீழ்மத்தூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11:40 AM | **End Time** | : | 11:50 AM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 08.08.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

(1) வழக்கு சொத்தில் உள்ள வழி வளைவாக செல்கிறதா என்றால் இரண்டு வளைவுகளாக செல்கிறது. தார் ரோடில் இருந்து முருகேசன் வீட்டிற்கு வடக்கு புறமாக சென்று மறுபடியும் வடக்கு புறமாகவே திரும்ப செல்கிறது. நான் சொல்லும் வளைவுகள் இதுதான். வாதி வெங்கடேசன் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். நீ.ம.சா.ஆ.2 காண்பிக்கப்பட்டு, இதில் 17 வது புகைப்படம் யார் உடையது என்றால் வாதி வெங்கடேசன் உடைய புகைப்படம். 18 வது புகைப்படம் என்னவென்றால் வெங்கடேசன் வீட்டிற்கு கிழக்கு பகுதியை காட்டும் புகைப்படம். 17 வது புகைப்படத்தில் தெரிகின்ற வழி எந்த வழி என்றால் அது அவர் வீட்டில் இருந்து அவரது நிலம் வரை மட்டும் செல்லும் வழியாகும்

(2) வெங்கடேசன் என்ன என்ன வாகனம் வைத்திருக்கிறார் என்றால் டிராக்டரில் தண்ணீர் எடுத்து செல்கிறார், மற்றும் இரு சக்கர வாகனம் வைத்திருக்கிறார். தண்ணீர் எங்கிருந்து எங்கு எடுத்து செல்கிறார் என்றால் விலைக்கு வாங்கி வேறு விவசாய நிலத்திற்கு எடுத்து செல்கிறார். எந்த

நிலத்திற்கு தண்ணீர் எடுத்து செல்கிறார் என்றால் ஊரை சுற்றி உள்ள நிலங்களுக்கு தண்ணீர் எடுத்து செல்கிறார். ஒரு நாளைக்கு எத்தனை முறை டிராக்டரில் தண்ணீர் எடுத்து சென்று விற்பனை செய்கிறார் என்றால் தேவைக்கு ஏற்ப விற்பனை செய்வார். எந்த சர்வே எண் நிலத்தில் இருந்து தண்ணீர் எடுத்து செல்கிறார் என்றால் எனக்கு தெரியாது.

(3) பிரதிவாதிகள் மூவரும் தெரியுமா என்றால் தெரியும். மூவரில் யார் இறந்தார் என்றால் சிறியவர் இறந்துவிட்டார். பிரதிவாதிகள் நிலத்தில் கிணறு உள்ளதா என்றால் 2018–2019 போர் போட்டிருந்தார்கள். கிணறு உள்ளதா என்றால் உள்ளது. எவ்வளவு ஆழம் உள்ள கிணறு என்றால் மழை காலத்தில் பாதி கிணறு இருக்கும், வெளியில் காலத்தில் 5–6 அடிகள் கீழ் இருக்கும். வாதி சொல்லியவாறு வழி இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த வழியில் எப்போதும் சென்றதில்லை என்றும் வாதி என் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அந்த வழியை தான் பயன்படுத்துகிறேன்.

<u>**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**</u>

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND
District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai